மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14–ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண். 23/18

பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: வாசன் | தேதி : 14.11.25
வயது : | த/பெ : சுப்பையா
கிராமம் : | தொழில் :
மாவட்டம்:

---

**14.11.25 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.20.07.1982ம் தேதியில் ராஜபாண்டி நாடார், மலையாண்டி நாடார் மற்றும் பால்பாண்டி நாடார் பிறப்பித்துக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 1 ஆகும். 25.03.1997ம் தேதி பால்பாண்டி நாடார் பிறப்பித்துக்கொடுத்த உயிலின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 2ஆகும். Tr.O.P.No.34/2020 வழக்கில் மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.14 19:07:02 +0530

நீதிமன்றம் 12.02.2024ம் தேதி பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 3 ஆகும்.

3.Tr.O.P.No.34/2020 வழக்கில் மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றம் 12.02.2024ம் தேதி பிறப்பித்த உத்தரவு ஆணையின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 4 ஆகும். புல எண் 54/56 க்குரிய கணிணி பட்டாவின் இணைய வழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது பி.சா.ஆ 5 ஆகும்.

குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் மற்றும் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.14 19:07:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.